ஈடுகொடுக்க முடியாது. வெகுசனம் மீது பழி தீர்த்துக்கொள்ளும் சிங்கள அரசின் போர்முறைத் திட்டமானது அப்பட்டமான இனக் கொலையை இலக்காகக் கொண்டது என்பதனை இன்றைய நாகரிக உலகம் நன்கு உணர்ந்துவிட்டது. அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்துவிட்டு, 'பயங்கரவாதிகளை' அழித்துவிட்டோம் என அத்துலத்முதலி அவிழ்த்து விடும் அபாண்டமான பொய்களை உலக சமுதாயம் இன்று நம்பப் போவதில்லை. மனித குலத்தால் ஒதுக்கப்பட்ட சர்வதேச நாசகாரச் சக்திகளின் உதவியுடன் ஈழத் தமிழினத்தை படிப்படியாக ஒழித்துக்கட்டும் சிங்கள அரசின் இனப் படுகொலைகளை இனிப் பொறுத்துக்கொள்ளப் போவதில்லை என பாரத நாடும் எச்சரித்திருக்கிறது. உலக சமூகத்தால் அந்நியமாக்கப்பட்டு ஆட்டம்காணும் சிங்கள இனவாத அரசு நீண்டகாலம் நிலைத்து நிற்கப் போவதில்லை. ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து தீவிரமாக்கி, ஜெயவர்த்தன அரசுக்கு குழிபறிப்பது எமது விடுதலை இயக்கமாக இருக்குமென்பதை நாம் உறுதியாக உலகிற்கு எடுத்துக் கூற விரும்புகிறோம்.

விடுதலைப்புலி இயக்கத்தின் சமீபத்திய இராணுவ வெற்றிகளை மூடி மறைத்து, எமது போராளிகள் பலர் கொல்லப்பட்டதாக சிங்கள அரசு விசமத்தனமான பொய்ப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து வருகிறது. ஆனால் உண்மையில் நடந்ததென்ன? சிங்கள ஆயுதப் படைகள் பல இடங்களில், பலத்த பதிலடிகள் வாங்கி, என்றுமில்லாதபடி பெரிய உயிர்ச் சேதத்தை அடைய நேரிட்டது. எமது இராணுவ நடவடிக்கைகளின் விவரத்தைக் கீழே தருகிறோம். •

**வடகடலில் கண்காணிப்பு வலயம்; மீறினால் சூடு**




**4.8.84**

## கடற்படையினர் மீது புலிகள் தாக்குதல் 6 பேர் கொல்லப்பட்டனர்

1984 ஆகஸ்டு 4ம் திகதி சனிக்கிழமை விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா கடற்படையினருடன் நேரடியாகப் போரிடும் நிலைமை உருவாகியது.

வல்வெட்டித்துறைக்கண்மையில் உள்ள பொலிகண்டி என்ற கிராமத்தில் விடுதலைப்புலிகளின் மோட்டார் படகு கடற்கரையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஸ்ரீலங்காவின் வடகரையோரத்தில் கண்காணிப்பு வலயத்தில் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த சிங்களக் கடற்படையினர் இந்த மோட்டார்ப் படகினைத் திடீரெனச் சுற்றி வளைத்தனர். பதினெட்டுப் பேரைக் கொண்ட ஸ்ரீலங்கா கடல் ரோந்துப் படையினரால் எதிர்பாராத நிலையில் எமது கெரில்லா வீரர்கள் நான்கு பேர் சுற்றி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வளைக்கப்பட்டனர். இந்நிலையில் தற்பாதுகாப்புக் கருதி எமது வீரர்கள், பதினெட்டு பேர் கொண்ட அந்தக் கடற்படைக் கோஷ்டியினர் மீது தாக்குதல் மேற்கொள்ள வேண்டியிருந்தது. கடற்படையினர் எமது கெரில்லா வீரர்களை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். சம்பவம் நடைபெற்ற இடத்தில் எமது வீரர்கள் நான்கு பேரே நின்றனராயினும் நீண்ட பயிற்சியும், சாகும்வரை போராடும் துணிவும் கொண்டவர்களாக அவர்கள் இருந்தமையால் இத்துணிகரத் தாக்குதலில் கடற்படைக் கூலிகளை அவர்கள் வெற்றிகரமாகத் தோற்கடிக்க முடிந்தது. இத்தாக்குதல் சம்பவத்தில் ஸ்ரீலங்காக் கடற்படையினர், ஆறு பேர் அந்த இடத்திலேயே சுடப்பட்டு மரணமானார்கள். மூன்று பேர் படுகாயமடைந்தனர். மிகுதிக் கடற்படையினர் பீதியில் தமது நவீன ரோந்துப் படகினையும் விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சில மாதங்களுக்கு முன் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த படகினைச் சுற்றி வளைத்து படகிலிருந்த பதினாறு தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொன்று இந்தக் கடற்படையினர் நடத்திய வெறியாட்டத்தை நாம் என்றும் நினைவில் வைத்திருக்கிறோம். ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு எதிரான எமது நீடித்த கெரில்லா யுத்த நடவடிக்கைகளில் கடற்படையினருக்கு எதிரான வெற்றிகரமாகத் தொடுக்கப்பட்ட முதல் பெரிய கெரில்லாத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.